விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 மாசி4 ஜ- அவ் 24 இதழ் 5
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 15-2-1985

'அமிர்', 'சிவா' கூட்டாக அறிவிப்பு

# தமிழகத்தில் தற்போது 80,000 அகதிகள்!

(திருச்சி)

இந்தியாவில் தற்போது 80,000 இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளார்கள். அடுத்த மாதத்தில் இத்தொகை இரண்டு லட்சமாக அதிகரிக்கலாமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம் சிவசிதம்பரம், செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் ஆகியோர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

நேற்று திருச்சியில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இருவரும் இதனைத் தெரிவித்தனர்.

மன்னாரில் அண்மையில் நடைபெற்ற சில சம்பவங்களைத் தற்போது மண்டபம் அகதிகள் முகாம்களிலுள்ள மன்னார் அகதிகள் ஊஜிர்தம் செய்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து மூன்று படகுகளில் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்த 262 தமிழ் அகதிகளுக்கு என்ன நடந்தது

(6-ம் பககம் 3-ம்கலம் பார்க்க)

## நெதர்லாந்தில் 1,000 தமிழர்கள்!

(லண்டன்)

''நெதர்லாந்தில் 1,000 இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கிறார்கள். இவர்களுக்காக

(6ம்- பக்கம் 3-ம் கலம்பார்க்க)

★ இராமேஸ்வரத்தில்பதற்றம்

★ ரயிலுக்கு தீவைப்பு

★ கடைகள் மூடப்பட்டன

# தமிழக மீனவர்கள் சுட்டுக் கொலை!

(மதுரை)

**இராமேஸ்வரத்துக்கு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர்.**

**இச்சம்பவத்தினால் ஆத்திரமடைந்த இராமேஸ்வரம் மீனவர்கள் ரயில் ஒன்றுக்குத் தீ வைத்தனர். கடைகள் யாவும் மூடப்பட்டன. தொடர்ந்து இப்பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது.**

இராமேஸ்வரம் துண்டிக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இரண்டு இந்திய மீனவர்களுமே இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்தோனி, ஆனந்தன் என்ற இரு மீனவர்களும் மேலும் நாலு மீனவர்களும் இயந்திர விசைப்படகு ஒன்றில்கடந்த செவ்வாய்க்கிழமை மாலை தங்கச்சி மடத்திலிருந்து துண்டிக் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் மீன் பிடித்துக்

(6ம் பக்க 4ம் கலம் பார்க்க)

## வீடு குண்டுவைத்து தகர்ப்பு!

(கல்வியங்காடு)

அரியாலை சித்திவிநாயகர் கோவிலுக்கு முன்னுள்ள வீதியில் உள்ள வீடு ஒன்று நேற்று மாலை குண்டுவைத்து தகர்க்கப்பட்டது.

குசமால் வீதி என்றழைக்கப்படும் இந்த வீதியிலுள்ள காசிப்பிள்ளை கணேசன் என்பவருக்கு சொந்தமான வீடே குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டது.

ராணுவத்தினரின் தேடுதல் முயற்சியின்போதே இந்த வீடு தகர்க்கப்பட்டது.

## சிதம்பரம் கப்பல் தீவிபத்து: 18சடலங்கள் கருகியநிலையில்!

(சென்னை)

சிதம்பரம்கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தில் 52 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது. இவர்களில் 18பேரின் சடலங்கள் கருகிய நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் பிரயாணம் செய்த 34பேரைக்காணவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 13 பேர் மலேசிய பாஸ்போர்ட்டும், 20பேர் இந்தியப் பாஸ்போர்ட்டும், ஒருவர் சிங்கப்பூர் பாஸ்போர்ட்டும் வைத்திருந்ததாகக் கூறப்பட்டது.

## பாதுகாப்பாக கொழும்பு சென்ற பஸ்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுக் காலை கொழும்பு சென்ற தனியார் பஸ்கள் அனைத்தும் பாதுகாப்பாகக் கொழும்பு போய்ச் சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்த பஸ்களும் பாதுகாப்பாக யாழ். வந்தன.

## அமைச்சர் 'லலித்' பேட்டி

# தீவிரவாதிகளை எதிர்கொள்ள அரசு தயாராகவுள்ளது!

(கொழும்பு)

'தீவிரவாதிகளின் வாய்ப்பேச்சுக் குறித்து நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. அவர்களை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவுள்ளோம்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி கொழும்பிலிருந்து வெளிவரும் சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''தற்பொழுது பல்வேறு பிரிவுகளாகச்செயல்பட்டுவரும் சகல குழுக்களையும் ஒன்றாக இணைத்து. இன்னும் 3 அல்லது 4 மாதங்களில் ஆயுதப்படையினருக்கு எதிராக பலமான ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தீவிரவாதத் தலைவர் ஒருவர் டைம்ஸ் சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்

''தீவிரவாதிகள் இதற்குமுன்

[6ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## பல்கலைக் கழக செய்திகளுக்கும் தணிக்கை

[கொழும்பு]

பல்கலைக் கழகங்கள், மாணவர்கள். கல்வி நிலையங்கள் சம்பந்தப்பட்ட செய்திகள் யாவும்

6 ம் பக்கம் 5ம் கலம் பார்க்க

## அமைச்சின் செயலாளர் விசாரணையில்!

(கொழும்பு)

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிரந்தர செயலாளர்திரு எம்.சண்முகராசா இரகசிய பொலிசாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

கடந்த 12ம் திகதி கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட இவர் தொடர்ந்து விசாரணைசெய்யப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

மூத்ததமிழ் நிர்வாக அதிகாரிகளில் இவரும் ஒருவராவார். (மா)

## தமிழக அமைச்சர்கள் விபரம் அறிவிப்பு

# புதியவர்கள் எவருமில்லை 6 பேருக்கு கல்தா!

[சென்னை]

தமிழ் நாட்டின் அமைச்சர்கள் பட்டியலை முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் அறிவித்துள்ளார்.

16 பேர் கொண்ட அமைச்சர்களின் பட்டியலை முதலமைச்சர் மாநில ஆளுநர் திரு. எஸ் எல் குரானாவிடம் நேற்றுக் காலை கையளித்தார்.

இந்த அமைச்சர்கள் பட்டியலில் புதிதாக எவரும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை அதே சமயம் முன்னைய அமைச்சர்களில் ஆறு பேர் இடம்பெறவில்லை.

இவர்களில் திரு நெடுஞ்செழியன், திரு எஸ் ராமச்சந்திரன் ஆகிய இருவரும் நேற்றுக் காலை பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டனர் ஏனைய 14 அமைச்சர்களும் இன்று

6ம் பக்கம் 5ம் கலம் பார்கக

## தமிழக அமைச்சர்கள்!

முதல்வர் எம் ஜி ராமச்சந்திரன் - [பொது நிர்வாகம், காவல்துறை லஞ்ச ஒழிப்பு, மதுஒழிப்பு, கனரக தொழில், வர்த்தக வரி, மதுவரி ]

வி. ஆர் நெடுஞ்செழியன் - [நிதிவருவாய்த்துறை தேர்தல், சட்டமன்ற விவகாரம்]

எஸ் ராமச்சந்திரன் - [மின்சாரம், இரும்பு, எஃகு கட்டுப்பாடு, ஆதிதிராவிடம்]

கே. ஏ. கிருஸ்ணசாமி - [தொழிலாளர் நலம், கால்நடை பராமரிப்பு, பால்வளம்]

ஆர் எம் வீரப்பன் - [செய்தி, அறநிலையத்துறை, வனவளம்,சுற்றுலா

[6ம் பக்க 4 கலம் பார்க்க)

## நீதி அமைச்சர் நிஸங்கா அறிவிப்பு

# வடக்கில் குடியேறுவேன்!

(கண்டி)

''நாட்டையும், இனத்தையும், நாட்டு ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் பொருட்டு தேசிய போராட்டத்தில் பங்குபற்றும் விதமாக நான் வடபகுதியில் சென்று குடியேறுவேன்''

நீதிஅமைச்சர் டாக்டர் நிஸங்கா விஜயரத்தின இவ்வாறு கூறினார்

கண்டி தலதா மாளிகையில் நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் இப்படிச் சொன்னார்.

''தியவதன நிலமையைத் தெரிவுசெய்வதற்கானதேர்தல் வரும் மார்ச் 11ம் திகதி நடக்கவுள்ளது. 12ம் திகதிக்குப் பின்னர் நான் வடபகுதிக்குச் சென்று குடியேறுவேன் வடபகுதியில் சிங்களக் குடும்பங்

(6-ம் பக்கம் 2-ம் கலம் பார்க்க)

## இந்தக் கொள்கைகளுடன் தமக்கு தொடர்பில்லையாம்

(யாழ்ப்பாணம்)

தனிநபர் சொத்துக்களைக் கொள்ளையடிப்பதை தமிழ்ஈழ மக்கள் விடுதலைக் கழகம் கண்டித்துள்ளது.

தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம்நேற்று வெளியிட்ட பிரசுரமொன்றில், கூட்டுறவுச் சங்கங்கள் போக்குவரத்துச்

5ம் பககம் 3ம் கலம் பார்க்க

# விளம்பரம்

## விற்பனைக்கு

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது. தயாரித்து அளிப்போர், சூரியாஸ்டோர்ஸ் வவனியா. கந்தசாமி கோவில் வீதி, சாவகச்சேரியில் அல்லது சுல்தான் அப்துல் காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 1787

நல்லூரில்-கோவில், பாடசாலை முதலியவற்றுக்கு சமீபமாக, 1½ பரப்பில் அமைந்த 4 அறைகள் Hall உள்ளடக்கிய நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1822, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1822

ஒன்றரைப் பரப்பு காணியில் மின்சாரம், தண்ணீர் வசதியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு நேரில். மீனாட்சி அம்மன் கோயில் வீதி, சங்கத்தானை, இ. இராஜகோபால். 1816

யாழ்ப்பாணம் பீச் றேட்டில் 1½ பரப்புக் காணியில் மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்டெட், R. G. பில்டிங், 70- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1836

யாழ்ப்பாணம் K. K. S. வீதியில் புதிய கல்வீடு மூன்று படுக்கை அறைகள், கார் கராஜ் மற்றும் சகல வேலைகள் முடிவடைந்த நிலையில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்டெட், R. G. பில்டிங், 70-ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1835

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் 2 பரப்பு வீடு கட்டக்கூடிய காணித் துண்டும், ஆஸ்பத்திரி வீதியில் ½ பரப்புக் காணியும் வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட், R. G. பில்டிங், 70- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1837

## கல்வி

''பாலர் ஆசிரியர் பயிற்சி 1985''க்குரிய பயிற்சி வகுப்பு மார்ச் இரண்டாந் திகதி ஆரம்பமாகின்றது. ஜி. சி. ஈ சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். முகவரி: பாலர் ஆசிரியர் சங்கம், 610 (418), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1831

## விற்பனைக்கு

யூரியா உரம் விற்பனைக்குண்டு. M. G. M. Forage Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

## வகுப்புகள்

பல்கலைக்கழக பட்டதாரி படிப்புக்கு சமமான பாடத்திட்டத்தின்படி கலை (B.A.), வர்த்தகம் (B Com.), விஞ்ஞானம் (B.Sc.) (Physical and Maths, Bio) பட்டப்படிப்புகள் கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளன. A/L நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் 5-3-85 முன் விண்ணப்ப படிவங்களுக்கு தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1828

ICMA மே 1985 பரீட்சைக்கு செக்ஷன் A செக்ஷன் B துரித மீட்டல் வகுப்பு; அனைத்துப் பாடங்கட்கும் (PAPER CLASS) ஆரம்பம் 16-2-85 வன்னியசிங்கம் B Com, M.Sc. (Econ), (Lond.) வைரவர் கடாட்சம், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24424. [1821]

### பருத்தித்துறை பல நோ. கூ. சங்கம் (வ/து)

### லொறிக்கு பொடி அடிப்பதற்கும், திருத்தவேலைக்கும்

### கேள்விப் பத்திரம் கோரல்

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் 27/2092 இலக்க இசுசு லொறிக்கு பொடி அடிப்பதற்கும், திருத்தவேலை செய்வதற்கும் இத்தால் கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. இதற்கு முற்பணமாக ரூபா 500/-வும், விண்ணப்பப் படிவத்திற்கு ரூபா 10/-வும் சங்கத்தில் கட்டி விண்ணப்பப் படிவத்தை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். அவ் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து 27-2-85-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

1985-02-11 1818

## ஐவர் சித்தி
(சுண்டுக்குளி)

1984ம் ஆண்டு அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் உள்ளவர்களுக்கு நடைபெற்ற வினைத்திறமை காண் தடைப் பரீட்சையில் யாழ் அரச செயலகத்தில் கடமையாற்றும் திரு. எம். பரமதாசன், கே. கனகநாதன் வி. எஸ். எஸ். செல்வராசா, எஸ் சண்முகலிங்கம், சண்முகசோதி மகாராணி ஆகிய ஐவரும் சித்தியடைந்துள்ளனர்.

## வெற்றுச்சாக்கு

6000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குள்ளது. ரூபாய் 200/- வைப்புப் பணத்துடன் மீளளிக்கப்படாத ரூபா 5/- செலுத்தி கேள்விப்பத்திரம் சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவேண்டும்.

சாக்கு விபரம் பிரதம சங்கத்தில் பார்வையிடலாம் விண்ணப்ப முடிவு திகதி 28-2-85

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
பொது முகாமையாளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்
பூநகரி
1819

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

சித்த வைத்தியத்துறையில் விஷேச தேர்ச்சிபெற்ற பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களிடமிருந்து பின்வரும் ரோகங்கள் சம்பந்தமாக விரிவுரைகள் நிகழ்த்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) முறிவு வைத்தியம் (Fracture)
(2) பாம்பு விஷக்கடி (Snake Bite)
(3) எரிகாயம் (Burns)
(4) விரணங்கள் / கட்டிகள் (Boils)
(5) கண் ரோகங்கள் (Eye Diseases)

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி 1985-ம் ஆண்டு மார்ச் மாதம் 04-ம் திகதியாகும்.

விண்ணப்பப்படிவங்கள் திருநெல்வேலிப் பல்கலைக் கழகக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23 X 10 ச. மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை யொட்டப்பட்ட கடித உறையும் இணைத்தனுப்பப் படல் வேண்டும்.

அரசசேவை / கூட்டுத்தாபனம் / நியதிச்சட்டசபை ஆகியனவற்றிலிருந்து விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரிகள் அத்தகைய நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
சித்தமருத்துவத்துறை.
கைதடி.
12 - 2 - 1985 1820

## நன்றி நவிலலும், அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும்

18- 1- 85ல் காலமடைந்த சரசாலை திரு. க பாலசிங்கம், திருமதிகள்: நல்லம்மா முருகேசு, (காலஞ்சென்ற) பாக்கியம் சின்னத்துரை, கமலம்மா வீரசிங்கம், இரசம்மா சிவகுருநாதன், அன்னலட்சுமி சுப்பிரமணியம், மகேஸ்வரி கனகசபை ஆகியோரின் அன்புத்தாயார் திருமதி செல்லம்மா கனகசபை (கணக்கர்) அவர்களின் ஈமச்சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், நன்றி தெரிவிப்பதோடு, 16-2-85 இரவு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 17- 2- 85 பகல் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், பங்குபற்றுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்
விசுவர் வளவு, சரசாலை மத்தி,
சாவகச்சேரி. 1830

## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,

குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்துகொடுக்கப்படும்.

PRASAD REST,
11-Upatissa Road,
BAMBALAPITIYA
PHONE: 587855

வ. நல்லையா,
அலவத்தை,
அளவெட்டி.
[1817]

## கோப்பாய் கிறீஸ்தவகல்லூரி

### முழுநேர தொழில் நுட்ப பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பயிற்சி நெறிகள்.-

1. மின்னொட்டுவேலை
2. மின்சார இணைப்பு வேலை
3. பிடவையும் உடை அமைத்தலும்
4. வானொலி திருத்துதல் } ஆரம்பிப்பதற்கு
5. கட்டிட வரைஞர் } உத்தேசிக்கப்பட்டுள்ளன

தகைமைகள்:-

1. எட்டாம் தரத்தில் சித்தி
2. பாடசாலையை விட்டு விலகியவராக இருத்தல்
35 வயதிற்கு குறையாது இருத்தல்

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் அதிபருடன் 20-02- 1985க்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 26- 2- 85.

பூ. க. இராசரத்தினம்,
அதிபர்.

14- 02- 1985 1824

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1934 – 2 – 23



மறைவு: 1983 – 2 – 15

### அமரர் கனகரத்தினம் துரைசிங்கம்

எங்கள் இல்லத்தலைவர், அன்புக் கணவன், இனிய தந்தை, அருமைச் சகோதரர், அரிய மைத்துனர், பண்பின் சித்தப்பா, பரிவுடை நண்பன், எங்கள் எல்லோருடைய நெஞ்சம் நீங்காது நிறைந்த ஒளி விளக்கு. உங்கள் ஆத்ம சாந்திக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தார்.
1809

1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

## AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

### மணிவாக்கு

ஓரிரு குழந்தைகள் பிறந்தான பிறகு கணவனும் மனைவியும் சகோதர சகோதரிபோன்று வாழ்ந்து இறைவனைப் பற்றிமட்டுமே பேசிவரவேண்டும். ஆத்ம சாதனைப் பாதையில் மனைவி புருஷனுக்குத் துணைவியாகவும் இருப்பாள். — ஸ்ரீராமகிருஷ்ணர்.

## நமதுநோக்கு

# இராணுவ ஆதிக்கத்தால் வீழ்ச்சிகாணும் இஸ்ரேல்

இருள்நெறியில் நம்பிக்கைகொள்வது, அளவுக்கு மீறிய நம்பிக்கை கொள்வது ஆகிய இரண்டும் தவறு. இரண்டுக்கும் இடையில்அளந்து,அறிந்து, உறுதியோடு நடைபோடுவதுதான் உயர்வுதரும் மகத்தான வாழ்க்கையாகும்.

ஒருகாலத்தில் இஸ்ரேல் என்ற கடுகளவு தேசம், மிகக் காரமானது, தீவிரமாக முன்னேறுகிறது; எனவே யாழ் நகரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாணம் தனித்து ஒரு பெரும் நாடாக வாழ முடியுமென்பதற்கு, தமிழ் தலைவர்கள் சிலர் இஸ்ரேலை உதாரணமாகக்கொண்டதை நாமறிவோம்.

இன்று தமிழ் மக்களின் விடுதலைப்போருக்கு ஆப்பு வைக்க இஸ்ரேலிய கூலிப்படை வந்ததென்றால் நம்மிற் சிலர் இருள்நெறியில் நம்பிக்கைகொண்டுள்ளதை இந்த நிகழ்ச்சி நிரூபிக்கின்றது.

இராணுவபலத்தால் எதையும் சாதிக்கலாமென்ற மந்திரத்தை ஜெபித்துவரும் நாடு இஸ்ரேல். 1982ல் பெய்ரூட்டில் நிகழ்ந்த பலஸ்தீனிய அகதிகள் படுகொலை உலக சமுதாயத்துக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் ஊட்டியது. இதற்குப் பொறுப்பானவா அன்றைய பாதுகாப்பு அமைச்சர் ஷரோன் என்பது அங்கு அரச கமிஷன் நடத்திய விசாரணையில் வெளிவந்தது.

அரசும் மக்களும் இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு, அதன் விளைவாக அவர் பதவி இழந்தபோதும் இதனைப் பிரசுரித்த அமெரிக்க பிரபல சஞ்சிகை 'டைம்' (Time) மீது ஷரோன் வழக்குத் தொடர்ந்து ஓரளவு வெற்றி பெற்று தான் குற்றவாளியல்ல என்ற அசந்தை கொண்டார்.

தமக்கு ஐந்துகோடி டொலர் மானநட்டம் கோரி சஞ்சிகைக்கெதிராக வைத்த வழக்கில் தோல்வி கண்டிருக்கிறார். மானநட்டத்துக்குரிய வகையில் சஞ்சிகை எதனையும் பிரசுரிக்கவில்லையென்பது பத்தரிகை உலகத்துக்கு ஒரு தேற்றமென்றாலும் எதிரியாகிய பத்திரிகை நிறுவனத்துக்கு பத்து லட்சம் டொலர் செலவென்பதை நாம் மறந்துவிட முடியாது.

அது அவ்வாறாக, 700 பலஸ்தீனிய அப்பாவி அகதிகளைக் கொன்ற பழியிலிருந்து தப்பி மானநட்டம் கோரி மீண்டும் ஆட்சியின் தலைமைக்கு முயன்று வரும் முன்னைநாள் அமைச்சர் ஷரோன் இஸ்ரேலின் ராணுவ கெடுபிடியின் பிரதம பிரதிநிதியென்றறிக.

இத்தகைய இஸ்ரேல் 'கேடுவருமுன்னே மதி கெட்டு வருமென்பதற்கமைய இன்று லெபனானிலிருந்து தானாகவே தனது படையை வெளியேற்றுகின்றது.

மூன்று கட்டங்களில் வெளியேற்றம் திட்டமிடப்பட்டு முதலாவது கட்டம் நிறைவேறமுன்னரே இரண்டாவதும் தொடங்கிவிட்டதென்று இன்று செய்தி குறிப்பிடுகிறது.

இரண்டாவது மகாயுத்தத்தில் ஹிட்லர் தற்கொலை செய்து விட்டாரென்ற செய்தியையும் ஜெர்மனி சரணடைந்ததையும் நேசபடைகள் மட்டுமல்ல அகில உலகமுமே நம்பத் தயங்கியது. அதேபோல லெபனானிலிருந்து இஸ்ரேலிய படை வெளியேற்றம் உண்மையாக, முற்றாக நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகம் இன்றும் நிலவுகிறது.

இரண்டாம் கட்டம் ஆரம்பமானதும், கோடைகால முடிவுக்கு முன்னர் மூன்றாவதும், முற்றாக வெளியேற்றப்படுமென்று இஸ்ரேலிய இன்றைய பிரதமர் பெரெஸ் உறுதியளித்திருப்பதையும் நம்ப நல்ல காரணங்கள் உண்டு.

மிகப் பிரதானமான லெபனானின் கெரில்லாத் தாக்கம், குட்டக் குட்டக் குனியலாமா என்ற வீறில் எழுந்த கெரில்லாப் படை அங்கு தங்கியிருந்த இஸ்ரேல் படைகளைத் தீவிரமாகத் தாக்கி நூற்றுக்கணக்கானவரைக் கொன்றும் ஆயிரக்கணக்கில் காயப்படுத்தியும் இஸ்ரேலிய ராணுவத் துடுக்கைக் கடந்த இரண்டுவருடகாலத்தில் அடக்கிவிட்டது அமைச்சர் ஷரோன் உருவாக்கிய 'பெரிய இஸ்ரேல்' என்ற திட்டம் சுக்குநூறாகி விட்டது.

இரண்டாவது காரணம், இஸ்ரேலின் பொருளாதார நெருக்கடி; நாளொன்றுக்கு படை தங்கியிருக்கும் செலவு பத்து லட்சம் டொலர்; நாட்டில் 450 சத பண வீக்கம்; பட்ஜட் துண்டுவிழும் தொகை அளவுகடந்திருக்கிறது. ராணுவ வெளியேற்றத்துக்கே பண நெருக்கடி என்று அமெரிக்காவிடம் 12 பில்லியன் டொலர் கடனுக்கு அரசு மன்றாடுகின்றது.

சர்வதேச பயங்கரவாதி என்று கொள்ளுமளவிற்கு சின்னஞ் சிறிய இஸ்ரேலை வளர்த்துவந்த அமெரிக்கா கடன் வழங்குவதற்கு பொருளாதார சீர்திருத்தத் திட்டமொன்றைத் தனக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்கிறது.

ராணுவ ஆதிக்கத்தில் அளவுகடந்த நம்பிக்கை கொண்ட இந்த நாட்டை ஈற்றில் அடக்கிய பெருமை லெபனானின் கெரில்லாப் படையைச் சாரும்.

இலங்கையில் —

# சாதாரணமக்கள் மீது ஆயுதப்படை தாக்குதல்!

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சு குற்றச்சாட்டு

[கொழும்பு]

இனப் பிரிவினைகளால் இலங்கையில் மனித உரிமைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன இவற்றின் தாக்கம் 1984-ல் மேலும்பல பாரதூரமான வன்முறைச் சம்பவங்களைத் தோற்றுவிக்க இடமளித்துள்ளது. உலக மனித உரிமைகள் சம்பந்தமான 1984-ம் ஆண்டுக்கான அறிக்கையை அமெரிக்க வெளிவிவகார அமைச்சு காங்கிரசுக்குச் சமர்ப்பித்துள்ளது.

1500 பக்கங்கள் கொண்ட அந்தப்பாரிய அறிக்கையில் இலங்கையைப்பற்றி இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் 160 நாடுகளின் சிவில் அரசியல் சுதந்திரங்களை உள்ளடக்கியதாக இவ் அறிக்கை இருக்கிறது. வெளிநாடுகளுக்கு உதவிகள் வழங்குவதற்கு முன்னோடியாக இவ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

வடக்கு — கிழக்கில் தமிழ்ப் புலிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கு மிடையில், 1984-ம் ஆண்டில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்கள் இவ் அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதலால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருப்பது புள்ளிவிபரங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

### வடக்கு கிழக்கில் மக்கள் கொலை

வடக்கிலும். கிழக்கிலும் பாதுகாப்புப் படையினர் சாதாரண மக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினர். தமிழர்கள் மட்டுமன்றி, முஸ்லிம்களும் இதனால் கொல்லப்படுகின்றனர். மார்ச் 28-ம் திகதி சுன்னாகத்தில், 7 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமுற்றனர். ஆகஸ்ட் 28-ம் திகதி வல்வெட்டித்துறை நகரத்தை ராணுவத்தினர் தாக்கியுள்ளனர். பிரஜைகள் குழுவின் அறிக்கையின் பிரகாரம் அத்தாக்குதலின்போது 130 வீடுகளும், 40 கடைகளும், 4 கார்களும், பல யந்திரப்படகுகளும் எரிக்கப்

(6-ம் பககம 3-ம் கலம் பார்க்க)

### வெள்ளிச்சிந்தனை

## சிவவிரதம்

ஒரு மாணவன் ஜி சி ஈ பரீட்சையில் சித்தியடையவில்லை என்றால் அவன் படித்த பள்ளிக்கூடமோ அவனுக்கு 'ரியூசன்' சொல்லிக் கொடுத்த ஆசிரியரோ அல்லது கல்வி நிலையமோ தான் சரியில்லை என்று பலர் கூறுகின்றார்கள் இதில் விசித்திரம் என்னவென்றால் அம்மாணவன் தனக்குக் கற்பித்த பாடத்தை சரிவரக் கிரகித்தானா? மீட்டுப்படித்தானா என்பதைப்பற்றிச் சிந்திப்பதோ கவலைப் படுவதோ இல்லை என்பதேயாம்.

திறமையும் ஊக்கமும் உள்ள ஆசிரியர் தன்னிடம் கல்வி கற்கும் மாணவர் சிறப்புற வேண்டும் என்னும் ஆர்வத்துடன் கல்விகற்பிக்கும் வேளை பராமுகமாக இருக்கும் மாணவனும் அவனைச் சேர்ந்தவர்களும் பரீட்சை முடிவை அறிந்தபின் அந்த ஆசிரியரைக் குறை சொல்வது போன்றே இன்று பலர் கடவுளைக் குறை கூறுகின்றனர்,

இன்று என்னை வழிபடுபவர்களுக்கு விசேடமாக அருள் செய்ய வேண்டும் என்று சிவராத்திரியில் சிவபெருமான் காத்திருந்தால் 'ஓம்' இன்று நான் சிவராத்திரிவிரதம், என்று சொல்லிக் கொண்டு, பலர் சீட்டாட்டம், டாடீடொக், வீடியோ, முதலிய உபாயங்களால் நித்திரை விழித்து விரதமிருக்கின்றனர். பின்னர் "எனக்கு இறைவன் அருள வில்லையே வரதம் அனுட்டிப்பதால் என்ன பயன்?" என்று கேட்கின்றனர் பராக்குப்பார்க்கும் மாணவன் விடயத்தில் ஆர்வத்துடன் கற்பிக்கும் ஆசிரியர் இகழப்படுவதுபோல் சிவபெருமானும் விரதமும் கூட இகழ்ச்சிக்கு உரியதாகின்றது

சமய அறிவு மனித ஒழுக்கம் பற்றி அறியாத வேடன் புலிக்கு அஞ்சி மரத்திலிருந்து இரவு முழுவதும் விழித்திருந்ததைச் சாட்டாக வைத்து 'வேடனே இத்தினம் சிவராத்திரியானதாலும நீ ஏறியிருந்த மரம் வில்வமரமாக அமைய கீழே ஒரு சிவலிங்கம் இருக்க நீயும் பொழுது போக்குக்காக இலைகளைப் பறித்துக்கீழே போட்டதை சிவலிங்கத்துக்கு செய்த வில்வார்ச்சனையாக ஏற்றுக் கொள்கின்றேன்" என்று சிவபெருமன் வேடனுக்கு அருளியது போல் விரம் என்று சொல்லிக் கொண்டு வீண் பொழுது போக்குபவர்களுக்கு; தமது அறிவையும் விவேகத்தையும் சிந்திக்கும் ஆற்றலையும் ஒதுக்கி வைத்துவிட்டு விரதமிருப்பதாகக் கூறுபவர்களுக்கு சிவபெருமான் எப்படி அருள முடியும்.

சிவராத்திரி விரதத்தின் பெருமையை ஆராயுமிடத்து சைவசமயிகள் ஒவ்வொருவரும் கட்டாயமாக அனுட்டிக்க வேண்டிய விரதம் என்பது உறுதியாகின்றது. பூரண உபவாசமும் இருந்து நித்திரை விழித்து இரவு முழுவதும் சிவ வழிபாடு பஞ்சாட்சர செபம் முதலியன செய்ய இயலாதவர்களும் தமது உடல் வலிமைக்கும் வாழ்க்கைப்பிரச்னைக்கும் ஏற்றவகையில் சிவராத்திரி விரதத்தை அனுட்டிக்க வேண்டும்.

மழைபொழியும்போது கவிழ்க்கப்பட்ட பாத்திரத்தால் மழை நீரை ஏற்க முடியாது இருப்பது போல் புண்ணிய காலத்தில் விரதம் வழிபாடு என்பன இல்லாதிருப்பவர் மனத்தூய்மையையும் சிவனருளையும் பெறஇயலாது

உலக போகங்களுக்கு முதன்மை கொடுக்காது சிவனருளையும் பக்தியையுமே குறிக்கோலாகக் கொண்டு சிவராத்திரிவிரதம் அனுட்டிப்பவர் சிவபுராணம் முதலிய தோத்திரங்களைப் பாராயணம் பண்ணுவது நன்று. சிவபெருமான் அருள் செய்யக் காத்திருக்கும் புண்ணிய தினத்தை முழுமையாகப் பயன் படுத்துங்கள் என்று நமக்குச் சொல்லுவது போலவே ஒரு திருவாசம் உள்ளது.

காலமுண்டாகவே காதல் செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப்
பிரான் தன்னடியவர்'கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான் வந்து முந்துமினே
— மணிக்கவாசகர்

— அருளாளன்

### வரப்பெற்றோம்

வித்துவான் க. சுப்பையா பிள்ளையினால் எழுதப்பெற்ற உரையுடன் கூடிய சிவபுராணம் கையடக்கமான நூலாக மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தால் இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது சிவபுராணத்தைப் பொருளுணர்ந்து ஓதவிரும்புவர்களுக்கு இது பேருபகாரமாகும்.

## "சமயவழியில் வாழ்வை அமைக்க வேண்டும்!"

(மாவிட்டபுரம்)

"சமயங்கள் காட்டும் வழியில் வாழ்க்கையை அமைத்துக்கொண்டால்தான் அவ் வாழ்க்கை சிறப்புடையதாக இருக்கும், வாழ்க்கைமுறைக்கு சமயக் கல்வி முக்கியம் தேவையானது. அக் கல்வியைக் கிராமங்கள்தோறும் உள்ள ஆலயங்கள்தான் சிறுர்களுக்குப் புகட்டுவதுடன், வழிகாட்டியாகவும் விளங்கவேண்டும்".

இவ்வாறு தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபையின் 38வது ஆண்டு நிறைவுவிழாவில் இடம்பெற்ற "பெரிய புராணச்சுருக்கம்" என்னும் நூல் வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறினார்.

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"எமது பெரும் பொக்கிஷங்களான புராணங்களையும், சமய நூல்களையும் சகலரும் விளங்கிக் கற்கும் வகையின் இலகுவானமுறையில் தொகுத்து வெளியிடுவது மிகவும் அவசியமானதாகும். இக்காலகட்டத்தில் இவ்வாறான வெளியீடு

[6ம்பக்க 3ம் கலம்பார்க்க]

## மக்கள் கருத்து

### திட்டியில் வாழாதவர்கள்

கரம்பனில் இரு பெண்கள் கொலையுண்டது தொடர்பாக ஈ பி ஆர் எல். எவ் என்ற இயக்கத்தினால் மரணதண்டனையளிக்கப்பட்டவர்கள் யாழ் திட்டியில் மணமுடித்து சிலகாலம் செபஸ்தியார் வீதியில் வாழ்ந்தவர்கள் என்று திரு. ம. அலோசியஸ் தங்கள் பத்திரிகையில் 11-1-1985 அன்று ஆசிரியர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட இருவரும் திட்டியில் மணமுடிக்காதவர்கள் செபஸ்தியார் வீதியில் வாழாதவர்கள், என்பதனை அறியத்தருகிறோம் இச் செய்தியால் எமது ஊருக்கு ஏற்பட்ட அபகீர்த்திக்காக வருந்துகிறோம்.

யோ. சின்னையா
பாரதி சனசமூக நிலையம்.
திருநகர்.

# இலங்கை அகதிகள் தங்கியுள்ள மண்டபம் முகாமில் இடவசதியில்லை!

[இராமநாதபுரம்]

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ள மண்டபம் முகாமில்இன்னும் 40 குடும்பங்கள் மட்டும் தங்குவதற்கு இடவசதி இருக்கிறதென்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக இலங்கையிலிருந்து அகதிகள் வருவதுபோல தொடர்ந்து இதே வீதத்தில் வருவார்களேயானால் முகாமில் இடவசதி இருக்காதென்றும், வருபவர்களை எங்கு தங்கவைப்பதென்றும் மத்திய அரசுதான் தீர்மானிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

மண்டபம் முகாமிலுள்ள சேதமுற்ற கட்டிடங்களைத் திருத்தும் பணி தற்போது மும்முரமாக நடைபெற்று வருவதாகவும், காலியான இடங்களில் தற்காலிக 'செற்' அமைக்கப்பட்டு வருவதாகவும் திரு. குருமூர்த்தி தெரிவித்தார்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி தாயகம் திரும்பும் இந்திய வம்சாவழித் தமிழர்களைத் தற்காலிகமாகத் தங்கவைத்து அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்காகவே இந்த முகாம் ஆரம்பத்தில் அமைக்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர், 83 ஆகஸ்ட்டில் வந்த இலங்கை அகதிகள் நிரந்தரமாக இங்கு குடியிருப்பதாகவும் கூறினர்.

## 'சிதம்பரம்' கப்பல் சென்னை வந்தது 41 பேரைக் காணவில்லை!

(சென்னை)

சிங்கப்பூரிலிருந்து வந்து கொண்டிருந்த போது தீ விபத்துக்குள்ளான 'சிதம்பரம்' பயணிகள் கப்பல் நேற்றுக்காலை சென்னை வந்து சேர்ந்தது.

இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்தினுல் 11 பேர் பலியானதாகவும் 41 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னைக்கு 300 கிலோ மீற்றர் தூரத்தில் 700 பயணிகளுடன் வந்து கொண்டிருந்த போது திடீரெனத் தீப்பிடித்துக் கொண்டது. தீயை அணைப்பதற்காக மூன்று கடற்படைக் கப்பல்களும் விமானங்களும் அனுப்பப்பட்டன.

தீப்பிடித்த சில மணிநேரத்தில் கப்பல் சிப்பந்திகளே தீயை அணைத்து விட்டதாகவும் 300 பேரின் உடைமைகளும் இத்தீவிபத்தில் முற்ருக சேதமடைந்து விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சிங்களவர்களை குடியமர்த்த 10000 தமிழர் வெளியேற்றம்!

(லண்டன்)

தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதற்காக 10 கிராமங்களிலிருந்து சுமார் 10 ஆயிரம் தமிழர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு வெளியேறிய தமிழர்கள் ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருப்பதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீர்காழி பேராசிரியரானுர்

(சென்னை)

அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தின் இசைத்துறைப் பிரிவின் தலைவராக சீர்காழி கோவிந்தராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் இசைமேதைகளான சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, மதுரை சோமு 'இசையரசு' தண்டபாணிதேசிகர் ஆகியோர் இப்பதவியை வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## எம். ஜி. ஆர். மூப்பனுர் சந்திப்பு

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கருப்பையா மூப்பனுர், தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனை அவரது இராமாவரம் இல்லத்தில் சந்தித்து உரையாடினுர்.

சுமார் ஒரு மணிநேரம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பு சிநேகபூர்வமானதென்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தெற்கு லெபனுனிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புக்களை விலக்குகிறது?

[பெய்ரூட்]

கிழக்கு லெபனுனிலிருந்து இஸ்ரேல் துருப்புக்களில் ஒரு பகுதியினர் விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளனர்.

தெற்கு லெபனுனிலுள்ள ஒரு பகுதியிலிருந்து இஸ்ரேல் துருப்புக்கள் விலக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதியை லெபனுன் பொலிசார் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர்.

1982ம் ஆண்டில் தெற்கு லெபனுனை இஸ்ரேல் ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து இவர்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன

தெற்கு லெபனுனிலிருந்து தனது துருப்புக்களை விலக்கிக்கொள்வதென்ற இஸ்ரேல் அரசின் முடிவைப் பாராளுமன்றம் அங்கீகரித்ததைத்தொடர்ந்தே துருப்புக்கள் விலக்கப்பட்டுவருகின்றன.

## போலந்து பிரதமரின் தமிழ்நாடு விஜயம்

[சென்னை]

இந்தியாவில் உத்தியோகபூர்வ விஜயத்தைமேற்கொண்டிருக்கும் போலந்துப் பிரதமர் ஜெனரல் ஜெருசெல்ஸ்கி இரண்டுநாள் பயணமாக நேற்று முன்தினம் தமிழ்நாட்டுக்கு வருகைதந்தார்.

இந்தியாவின் விமானப்படை விசேட விமானமொன்றில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய போலந்துப் பிரதமரை தமிழ்நாடு சபாநாயகர் திரு ராஜாராம், சட்ட மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம், ஆளுநர் எஸ் எல். குரானு ஆகியோர் வரவேற்றனர். பின்னர் அவர் தமிழ்நாடு ராஜ்பவனுக்கு சென்ருர்.

அன்று பிற்பகல் அவர் மகாபலிபுரம் சிற்பங்களைப் பார்வையிட்டார். மகாபலிபுரம் சிற்பங்கள் பாரத தேசத்தின் பழம்பெரும் கலாசாரத்தைப் பிரதிபலிக்கிறது என்று தெரிவித்தார்.

கம்யூனிஸ் நாடான போலந்தின் பிரதமர் தனது நான்கு நாள் விஜயத்தில் இரண்டுநாட்களை தமிழ்நாட்டில் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தற்போது போர்த்துக்கல் பிரதமர் விஜயம் செய்யவில்லை. போலந்துப் பிரதமர் மாத்திரம் விஜயம் செய்கின்ருர் என்பது குறிப்பிடத்தக்கது. [சூ]


## பூஞ்சணக் காளான் நோய்களைப் பூரணமாகக் கட்டுப்படுத்த...

## 'டைத்தேன் எம் 45'




250 கிராம்: ரூ. 40/-
500 கிராம்: ரூ. 75/-

பல பாவனைக் காளான் நாசினி 'டைத்தேன் எம் 45'

உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், புகையிலை, நிலக் கடலை, தக்காளி, கரட், அவரை, சுரை, கோவா, பூக்கோவா, திராட்சை முதலிய எந்தப் பயிரைப் பாதிக்கும் எவ்வித பூஞ்சணக் காளான் நோய்களையும் அது அறவே கட்டுப்படுத்தும்.

வெளிறல், வெதும்பல், அழுகல், வாடல், புள்ளி விழல், கொப்புள நோய் போன்ற எல்லா வற்றையும் ஒழிக்கும் 'டைத்தேன் எம் 45' பாவித்து, அதிக விளைச்சலும் இலாபமும் பெறுங்கள்.

பயிர் வளம் பெருக்கப் பாவியுங்கள் 'டைத்தேன் எம் 45'

CIC கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட் த.பெ. எண் 352, கொழும்பு 1.


## கடற்படை கைது செய்த சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜராவர்

(கொழும்பு)

கடந்த வருடம் காரைநகர் கடல் பகுதியில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களும் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்

இவர்கள் நேற்று முன்தினம் கோட்டே மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது இவர்களை ஜூலை 25-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறும் மேற்படி திகதியில் உயர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் காரைநகர் கடல் பகுதியில் வைத்து 23 கிலோகிராம் டைனமைட், 23 கிலோகிராம் வயர்கள் ஆகியவற்றுடன் இவர்கள் கைது செய்யப்பட்டனர். (சூ)

## கைது செய்யப்பப்பட்ட பல்கலைக்கழக மாணவனுக்கு பரீட்சை எழுத அனுமதி

(மட்டக்களப்பு)

அண்மையில் மட்டக்களப்பு துறைநீலாவணை கிராமம் பாதுகாப்புபடையினரால் சுற்றிவளைக்கப்பட்ட போது விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடமாணவர் ஒருவருக்கு இறுதிப்பரீட்சை எழுத அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மாணவன் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் இறுதிப் பரீட்சை எழுத முடியாத சூழ்நிலை ஏற்படுமென்று மட்டக்களப்பு பிரஜைகள் குழுவின் செயலாளர் திரு. பிரின்ஸ் காசிநாதர் பாதுகாப்புப்படை

[5-ம் பக்கம் 1-ம்கலம் பார்க்க]

## சங்கானை, பண்டத்தரிப்பு

# ப. நோ. கூ. சங்களில் பணம், பட்டரிகள் கொள்ளை!

(சுன்னாகம்)

சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் நேற்று முன்தினம் 1,600 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் பகல் 2 மணியளவில் சங்கத்தினுள் நுழைந்த இரு துப்பாக்கி இளைஞர்கள் காசாளரிடம் துப்பாக்கிகளை காட்டிப் பயமுறுத்தி 'லாச்சி'யைத் திறந்து 1.600 ரூபா பணத்தைக் கொள்ளையடித்து சென்றதாகக் கூறப்பட்டது

சம்பவம் நடைபெறுவதற்கு சிலமணி நேரத்திற்கு முன்னதாகவே சங்கத்தின் ஒரு தொகை ரொக்கப்பணம் வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டதால் அப்பணம் தப்பி விட்டதாகவும் சங்க உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இதேவேளை பண்டத்தரிப்பில் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் பண்டத்தரிப்பு கிளையிலும் விளான் கிளையிலும் பெரும் தொகையான பற்றறிகள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன.

இதேபோல் மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்திலும் 1 பெட்டி பற்றறிகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

## இந்தக்....

1-ம் பக்கம் 3ம்கலத்தொடர்ச்சி

சபை, தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள், அஞ்சல் நிலையங்கள் ஆகியவற்றில் நிகழும் கொள்ளைகளையும். தனிநபர் சொத்துக்கள் கொள்ளையடிப்பதையும், வன்மையாகக் கண்டித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பது: ''இத்தகைய கொள்ளைகளை தடுத்து நிறுத்த உதவுமாறு வளர்ச்சியடைந்த பொறுப்புள்ள ஸ்தாபனங்கள் அனைத்துக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

''இதன்பின்பும் இவ்வாறான கொள்ளைகள் நிழ்வது தமிழீழ மக்களின் விடுதலையை கொள்கைப் பற்றோடும், உறுதியோடும் முன்னெடுத்துச் செல்லும் ஸ்தாபனங்களை மாசுபடுத்தும்வகையில் மேற்கொள்ளப்படும். இழிசெயலாகும்.

''இழிசெயல்களை தமிழீழ மக்களின் விடுதலைக்காகப் போராடும் எந்த ஒரு விடுதலை ஸ்தாபனமும் செய்யாதென்று நம்புகின்றோம்,

''அண்மையில் நடைபெற்ற ஹட்டன் நாஷனல் வங்கிக் கொள்ளை, தனியார் நகைக் கடைகள் கொள்ளை, தனிநபர்களைப் பணயம்வைத்தல் என்னவற்றுக்கும் எங்கள் ஸ்தாபனத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை.

''இவ்வாறான இழிசெயல்களில் ஈடுபடுவோரை மக்கள் முன் அம்பலப்படுத்த ஏனைய பொறுப்புள்ள விடுதலை ஸ்தாபனங்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்'' (மா-க)

## கேரதீவு சங்குப்பிட்டி படகு சேவை

[யாழ்ப்பாணம்]

கேரதீவுக்கும் சங்குப்பிட்டிக்குமிடையிலான படகுச் சேவை இம்மாதம் 17ம், 18ம் திகதிகளில் காலை 6மணிமுதல் மாலை 6மணிவரை இடம்பெறுமென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

## தற்காலிகமாக நிறுத்தம்

(சுண்டுக்குளி)

யாழ். உள்நாட்டு வியாபார கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் கடமையாற்றும் பரிசோதகர்கள் ஐந்து பேருக்கு இவ்வருடம் ஜனவரி 1ந் திகதி முதல் மட்டக்களப்பு, திருகோணமலை வவனியா ஆகிய இடங்களில் கடமையாற்ற இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது. இவர்கள் தற்போதைய நாட்டு நிலைமையை முன்னிட்டு உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்ட தற்கிணங்க இவ்வருடம் ஜூன் மாதம்வரை இவர்களது இடமாற்றம் பிற்போடப்பட்டுள்ளது.

## ஆசிரியர் சம்பள அதிகரிப்பு

# இவர்களுக்கு இல்லை

(மட்டக்களப்பு)

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு பயிற்றப்பட்ட ஆசிரியர் தரத்தில் குறைவானவர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய சம்பளத்திட்டம் தொடர்பான அறிவித்தல் தற்போது சகல கல்வி இலாகாவிற்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

அவ் அறிவித்தலில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தரத்திற்கு குறைந்த தரமான தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் (க. பொ. த. சாதாரண) தராதரப்பத்திரம் பெற்ற (உயர்தர) ஆசிரியர்களின் விபரங்கள் இடம்பெறவில்லை,

ஏனைய ஆசிரியர்களுக்கு இச்சம்பள அதிகரிப்பு ஜனவரி, பெப்ரவரி மாத நிலுவையுடன் அடுத்த மாத சம்பளத்தில் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## VACANCY

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

LECTURER : Electrical Engineering
Candidate with Electrical Engineering degree can apply.

SALARY: Rs 1,900/- to Rs 2,600/- per month

INSTRUCTOR: Engineering Drawing
Electronics

Candidates with degree or diploma qualifications in the above fields can apply.

SALARY : Rs, 1,200/- to Rs. 1,800/- per month

Apply with full bio-data to Director,
Jaffna College Technical Institute. vaddukoddai.
Closing date—26th February, 1985.

1838 DIRGCTOR


## குழந்தை மரணம்

[மன்னார்]

வீட்டின் அருகில் இருந்த பள்ளத்தில் தேங்கிநின்ற மழைநீரில் விளையாடிய ஒன்றரை வயதுக்குழந்தை நீரில் மூழ்கி மரணமானது.

இச் சம்பவம் பேசாலைப் பகுதியில் இடம்பெற்றது வீட்டிலுள்ளோர் வீட் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில் குழந்தை தவழ்ந்து சென்று நீரில் விளையாடிய போது நீரில்மூழ்கி மரணமாகியதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மானிப்பாய் இந்து ஆசிரியருக்கு கௌரவம்!

[மானிப்பாய்]

மானிப்பாய் இந்துக்கல்லூரி சம்பந்தர் மண்டபத்தில் பழமைவாய்ந்த சிறப்புமிகுந்த நடேசர் உருவத்திற்கு அலங்கார அமைப்பு நிர்மாணிக்கப்பட்டு விழா கொண்டாடப்பட்டது.

அலங்கார அமைப்பை உருவாக்கிய கல்லூரியின் சித்திர ஆசிரியர் திரு. கா. சிவசுப்பிரமணியத்தின் 25 வருட காலசேவையைப் பாராட்டிப் பேசிய அதிபர் திரு. எஸ். வி. மஹேசவேலு அவருக்கு பொன்னுடை போர்த்தி கௌரவித்தார். அன்றியும் இதனை நிர்மானிப்பதற்கு தூண்டுகோலாக இருந்த முன்னாள் அதிபர்கள், திரு. க. முத்துவேற்பிள்ளையையும், திரு. எஸ். ரி சாரியையும் அவர் பாராட்டிப் பேசினார்.

இதனைத்தொடர்ந்து இந்து மாமன்ற போஷகர் திரு சி குமாரசாமி கலை அம்சம் பொருந்திய சோழர்கால சிற்பத்தின் பெருமை பற்றியும் காலஞ்சென்ற அதிபர் வி. வீரசிங்கம் காலத்தில் தினசரி வழிபாட்டுக்குரிய விக்கிரகமாக இச்சிலை இருந்தைதைப் பற்றியும் விளக்கிக் கூறினர்.

அடுத்துப்பேசிய ஆசிரியர் திரு. வி தம்பாப்பிள்ளை நடேசர் பஞ்சகிருத்திய நடனத்தின் தத்துவத்தைப் பற்றியும் அலங்கார அமைப்பினை உருவாக்கிய ஆசிரியரின் கலைத்திறமையைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர்.

இறுதியில் ஆசிரியர் திரு. கா சிவசுப்பிரமணியம் தமக்கு அளிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்தார்.

## பல்கலைக்கழக

(4-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

இணைப்பு அதிகாரியிடம் சுட்டிக் காட்டினர்.

இதனையடுத்து பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டுள்ள இம் மாணவன் பரீட்சை முடிய மீண்டும் விசாரணைக்குச் சமூகம்தர வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளார்.

### யாழ். கல்வி மாவட்டத்தில் பாடசாலையை விட்டு விலகியோருக்கான முழுநேர

## ஆங்கில சுருக்கெழுத்து – தட்டச்சுப் பயிற்சியாளர்களுக்கான விண்ணப்பம்

பயிற்சி நடைபெறவுள்ள காலம் மார்ச் 1985 தொடக்கம் அக்டோபர் 1985 வரை காலை 9-00 மணி — 1-00 மணி.

**தகுதிகள்:**

1. கல்வித் தகைமை:
   (அ) க. பொ. த. (சா. த.) பழைய / புதிய பாடத்திட்டத்தில் கணிதம், தமிழ், ஆங்கிலம் ''C'' தரம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
   அல்லது
   (ஆ) தே. க. பொ. த. ப. பரீட்சையில் கணிதம், தமிழ், ஆங்கிலம் ''B'' தரம் ஆகிய பாடங்கள் உட்பட 8 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை: 28-02-85 அன்று 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராய் இருத்தல்.
3. பயிற்சி நடைபெறவுள்ள பாடசாலைகள் பின்வருமாறு:
   1. யா / மத்திய கல்லூரி - யாழ்ப்பாணம்.
   2. யா / வேம்படி மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்.
   3. யா / இந்து மகளிர் கல்லூரி - யாழ்ப்பாணம்.
   4. யா / டிறிபேர்க் கல்லூரி - சாவகச்சேரி
   5. யா / அருணோதயாக் கல்லூரி - அளவெட்டி.
   6. யா / விக்ரோறியாக் கல்லூரி - சுழிபுரம்.
   7. யா / நெல்லியடி ம. ம. வி - கரவெட்டி.

விண்ணப்பங்கள் யாவும் கீழ்க்காணும் விபரங்களுக்கு அமையத் தயாரித்துப் பயிற்சி நடைபெறவுள்ள பாடசாலை அதிபர்களுக்கு 28-02-1985ம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

விண்ணப்பத்தில் முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதியும் வயதும், பால், கல்வித் தகைமை ஆகியன காட்டப்படல் வேண்டும்.

ஒப்பம்.
ம. சிமியாம் பிள்ளை,
யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர்.

1827


லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (Karatte Film)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-30 P.m
GREEN ICE
(Adults)

றீகல்
தினசரி 10-30, 2-00
மட்டும்
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
மட்டும்
எம். ஜி. ஆர் சரோஜா தேவி அசோகன் நடிக்கும்
தேவர் பிலிம்ஸ்
தாய் சொல்லைத் தட்டாதே

# பேய் மழை!

வெட்டி அடிக்குது மின்னல்!
கொட்டி இடிக்குது மேகம்!
கூ கூ என்று விண்ணைக் குடையுது காற்று!
சட்டச்சட சட்டச்சட என்று
கொட்டிக் கனைக்குது வானம்!
எட்டுத் திசையும் இடிய
கொட்டு கொட்டென்று
பேய் மழை பெய்கிறது!!!

அடாது மழை பெய்தாலென்ன
விடாது தடைகள் வந்தாலென்ன
கேட்டிலும் துணிந்து நின்று
இழப்பிலும் சோர்வு தவிர்த்து

செய்தொழில்
தெய்வமெனப் போற்றி

யாழ். குளோபல் ரெலெக்ஸ் ரெலிபோன் சேவைகள்

எவ்வகையிலும் தரம் குன்றாது
இரவு பகல் 24 மணி நேரமும்

எந்நாளும் எப்பொழுதும்
தொடர்ந்து
நடாத்தப் பெறுகின்றன.

குளோபலைக் கூப்பிட—
23015, 23249, 23312, 24782, 24783.

# சிங்கப்பூர்ராஜரத்தினம் கூறுகிறர் "கோழைத்தனமான தலைமை நயவஞ்சகமான அரசியல் வன்முறைகளுக்கு இதுவே காரணம்"

[சிங்கப்பூர்]

"கோழைத்தனமான தலைமை, நயவஞ்சகமான அரசியல் ஆகியவற்றின் வெளிப்பாடுகளே மொழி-மத பூசல்கள். அரசியல் வன்முறைகள்" என்று சிங்கப்பூர் முன்னுள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதையசிரேஷ்ட அமைச்சருமான திரு. எஸ் ராஜரட்ணம் கூறியுள்ளார்.

சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தமிழர் சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதன் 75-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே திரு. ராஜரட்ணம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசியதாவது:-

"இலங்கை இனப்பிரச்னை சிங்கப்பூர் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கின்றது.

"கோழைத்தனமானதலைமை நயவஞ்சகமான அரசியல் என்பனவற்றின் வெளிப்பாடுகளே மொழி-மத பூசல்கள், அரசியல் வன்முறைகள் என்பதனை அப்பிரச்னை எமக்கு உணர்த்துகின்றது.

'இலங்கை இனப்பிரச்னை விதிவிலக்கானதொன்றல்ல. ஆயினும் அது இன்று உலகின் கவனத்தைஈர்த்ததொன்ருக இருக்கின்றது.

"சிங்கப்பூரில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் எத்தகைய சலுகைகளையும், வாய்ப்புக்களையும் பெற்றிருக்கிறர் என்பதற்கு நான் ஒரு நல்ல உதாரணமாக இருக்கிறேன் இலங்கைத் தமிழனாக நான் அங்கு வாழ்ந்து அரசியலில் ஈடுபட்டிருந்தால் இத்தகையதொரு இடத்தை வகித்திருக்கமுடியுமா? என்பதனை அடிக்கடி நினைத்துப்பார்ப்பது உண்டு" என்றார்.

"நிலையான கொள்கையற்ற போக்கு, புறக்கணிப்பு என்பனவே மக்களை வன்முறைகளில் ஈடுபடத் தூண்டுகின்றன" என்றும் அவர் கூறினர்.

"சிங்கப்பூரில் இலங்கைத் தமிழர்கள் பிரச்னையைக் கிளப்பினுல் மீண்டும் இலங்கைக்குப் போகமுடியாது. அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா ஆகியவற்றின் கதவுகளும் மூடப்பட்டுவருகின்றன. எனவே ஒற்றுமையுடன் வாழ்வதே சிறந்தது" என்றும் அவர் எச்சரித்தார். (கி)

## சமயவழி

(3ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

சள் மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொன்ருகும். கல்லூரிகளில் சமயபாடம் பரீட்சை மட்டத்தில் தேர்வு நின்றுவிடுவதால், ஆலயங்கள் மூலமாக சமயநெறி வளர்க்கப்படவேண்டும்.

"சமய நெறிகளை புகட்டுவதில் அந்தணர்கள் பெரும் பங்குவகிக்கவேண்டும். சமய நூல்களை ஓதுதல் ஓதுவித்தல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்பவற்றை சிறுவயதிலிருந்தே ஊட்டுவித்தல் சாலச் சிறப்புடையதாகும்" என்றார்.

நூல்ஆய்வுரை நிகழ்த்திய திரு நம. சிவப்பிரகாசம், பிரம்ஸ்ரீ வ. குசுசர்மா, சைவப்புலவர் திரு வை நடராஜன், விரிவுரையாளர் திருமதி கலாதேவி பொன்னம்பலம் ஆகியோர் நூலின் சிறப்புப்பற்றியும் நூல் ஆசிரியர் பிரம்ஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்களின் பணிபற்றியும் பாராட்டிப் பேசினர்

நூலை வெளியிட்டுவைத்த செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 20 பிரமுகர்களுக்கு முதற் பிரதிகளை வழங்கினர்.

திரு வேனிலான் நூலின் பதிப்புரை குறித்துப் பேசுகையில் "மறுபிரசுரமாகும்போது இந் நூல் மேலும் விபரங்களுடன் வெளிவரும்" என்று கூறினர்

## சதாரணமக்கள்

[3ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

பட்டன ஆகஸ்ட் 11ம் திகதி பாதை குண்டுவெடிப்பினுல் 6 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதையடுத்து. முஸ்லியகளுக்குச் சொந்தமான 100 கடைகள் எரிக்கப்பட்டதை அரசு ஒப்புக்கொண்டுள்ளது நஷ்டஈடு வழங்கவும் அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

### ஹாட்லி எரிந்தது

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பொலிஸ் எரித்தது அரசு அதற்குப் பொறுப்பையேற்காத போதிலும், அதற்குநஷ்டஈடுவழங்க ஆணைக்கம் தெரித்தது

டிசம்பர் 4ம் திகதி மன்னரில் பாதைக்குண்டு வெடிப்பினுல் ராணுவவீரர் ஒருவர் கொல்லப்பட்டார். அதனையடுத்து ராணுவத்தினர் இரண்டு. பஸ்களையும், அருகில் இருந்த தபால் அலுவலகத்தையும் பாதையில் பலதூரம்வரை பொதுமக்களையும், கண்டபடி தாக்கினர்

1983 ஜூலை வன்முறையின் போது, பாதுகாப்புபடையும் அவற்றில் ஈடுபட்டது அவர்களை அரசு கட்டுப்படுத்தவில்லை.

## இன்று நடக்கும் பிரிவுபசாரம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் ஆசிரியர்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள திருமதி ஞா. இராமச்சந்திரன், திருமதி ஜேட்சி கைலாசபிள்ளை, செல்வி சி. பொன்னம்பலம், செல்வி ஏ. எலியஸ் ஆகியோருக்கு ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தினராலும், மாணவர்களினாலும் சேவை நலம் பாராட்டு வைபவம் இன்று நடாத்தப்படவுள்ளது கல்லூரி அதிபர் திருமதி க ஆறுமுகதாசன் தலைமையில் இவ்வைபவம் நடைபெறும்

## இம்மாத ஒய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

பெப்ரவரி மாதத்துக்கான ஒய்வூதியப் பணம் இம்மாதம் 20-ம் திகதி முதல் வழங்கப்படும்.

பின்வரும் ஒழுங்கில் இந்த ஒய்வூதியம் வழங்கப்படும்.

20-ம் திகதி: கரவெட்டி, மானிப்பாய், காரைநகர், வண்ணார்பண்ணை, நயினுதீவு, வேலணை.

21-ம் திகதி: யாழ்ப்பாணம், அச்சுவேலி, ஊர்காவற்றுறை, சுழிபுரம்

22-ம் திகதி: யாழ்ப்பாணம், அளவெட்டி, சுன்னுகம், தெல்லிப்பளை

25-ம் திகதி: உரும்பராய், கொக்குவில், சங்கானை, வட்டுக்கோட்டை

26-ம் திகதி: வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, புங்குடுதீவு, கைதடி, பண்டத்தரிப்பு.

27-ம் திகதி: பருத்தித்துறை; காங்கேசன்துறை, கோப்பாய், கொடிகாமம், நெடுந்தீவு, அனலைதீவு

## நீதியமைச்சர்...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

களைக் குடியமர்த்தும் திட்டத்துக்கு எனது தொகுதியான டெடிகமவிலிருந்து 150 குடும்பங்கள் தெரிவுசெய்யப்படும். அவர்களை அங்கு தனியாக அனுப்பிவைக்க விரும்பவில்லை நானும் அவர்களுடன் கூடச்சென்று குடியேறவிரும்புகிறேன் தேசிய போராட்டத்தில் முழுமூச்சாகப் பங்குபற்றவும் தீர்மானித்துள்ளேன்" என்று அவர் அங்கு கூறினர்.

## நெதர்லாந்து...

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

நெதர்லாந்து அரசுகுடிவரவு சட்டவிதிகளைத் தளர்த்தாது. இங்கு தங்கியுள்ள தமிழர்களுக்கு கூட்டுமுறையில் புகலிடமளிக்கப்படமாட்டாது. ஒவ்வொருவரது நிலைபற்றியும் தனித்தனியாக ஆராயப்படும்'

இவ்வாறு நெதர்லாந்தின் வெளிநாட்டமைச்சர் அந் நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் மத்தியில் உரையாற்றுகையில் கூறினர்.

## தமிழகத்தில்...

[1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

என்று இதுவரை தெரியவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மண்டபம் அகதிகள் முகாமில் தற்போது 4000 அகதிகள் தங்கியுள்ளனர் இவர்களில் 2500 பேர் கடந்த 45நாட்களுக்குள் இந்தியாவுக்கு வந்தவர்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவின் மத்திய அரசும்' மாநில அரசும் இலங்கைத் தமிழ் அகதிகளை நல்லமுறையில் பராமரித்துவருகின்றபோதும் இவர்கள் அனைவரும் தாயகம் செல்லவேண்டுமென்றே விரும்புவதினுல் இலங்கைஇனப் பிரச்னை விடயத்தில் இந்திய அரசு தலையிட்டுஇவர்கள் அனைவரும் இலங்கை திரும்புவதற்கான வழியை ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும் இவர்கள் மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

தற்போது இலங்கையில் குழப்பமும், நெருக்கடியும் மிகுந்தநிலைகாணப்படுகிறது பங்களாதேஷ் போருக்கு முன்னர் அங்கு என்ன நிலை காணப்பட்டதோ அதேபோன்றதொரு நிலையே தற்போது இந்தியாவில் காணப்படுகிறது.

இதுவரை இந்தியாவில் 80,000 இலங்கை அகதிகள் இருப்பதினுல் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் கமிஷனர் இதுவிடயத்தில் உதவவேண்டும் என்றும் இருவரும் கோரிக்கைவிடுத்தனர். (சூ)

## அகதிகள் நிவாரணப் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

போரூட், றெட்பாஞ, சர்வோதயம் ஆகிய சமூக ஸ்தாபனங்கள் இணைந்து செயல்படுத்தும் அகதிகள் நிவாரணப் பணிகளின் தொடக்க விநியோகம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த வைபவத்தின்போது பருத்தித்துறை, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரிசி, பருப்பு, மீன்ரின், பால்ரின் ஆகியவை விநியோகிக்கப்பட்டன.

நோர்வே நாட்டைச் சேர்ந்தறெட்பாஞதிட்டமிடல் இயக்குனருடன், அகதிகள் நிவாரண திட்டமிடல் ஒருங்கிணைப்பாளர் திரு. லிங்சாட், போரூட்வதிவிடப் பிரதிநிதி திரு இங்கே குரெஸ்லென்ட், றெட்பாஞவதிவிடப் பிரதிநிதி திரு அன்னமேரி லிவருட் சர்வோதயப் பிரதிநிதி அஸ்ஸ குமார நவரட்ன, யாழ் சமூக சேவை உதவி இயக்குநர் திருமதி. சிதம்பரப்பிள்ளை யாழ் மாவட்ட மீன்பிடி விரிவாக்க அலுவலர்திரு. சிவஞானம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ரா)

## தமிழக அமைச்சர்கள்...

(1-ம் பக்கம் -5ம் கலத்தொடர்ச்சி)

சி. அரங்கநாயகம் - [கல்வி, தமிழ்வளர்ச்சி]

கே காளிமுத்து - வேளாண்மை, நகரதிட்டமிடல், குடி நீர்விநியோகம்]

சி பொன்னையன் - [சட்டம்]

டாக்டர். எச். வி ஹண்டே - [மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்றுப்புற சூழல்]

எஸ் முத்துசாமி - [போக்குவரத்து, நெடுஞ்சாலை]

எஸ். திருநாவுக்கரசு - [உணவு, விலைக்கட்டுப்பாடு, மக்கள் தொகை கணிப்பீடு]

ஆர். சௌந்தரராஜன் - [உள்ளுராட்சி, வீடமைப்பு]

எம் ஆர் கோவிந்தன் - [மீனவளம், பிற்பட்டோர் நலத்துறை]

திருமதி கோமதி சீனிவாசன் - [சமூகநலம், சத்துணவுத் திட்டம்]

திருமதி விஜயலட்சுமி பழனிசுவாமி - [கைத்தறி]

வை எம் யூசுப் - [பொதுப்பணி]

கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் - [கூட்டுறவு, கிராமியத் தொழில்துறை]

## புதியவர்கள்...

[1-ம்பக்கம்5கலத் தொடர்ச்சி]

காலை பதவிபபிரமாணம் எடுப்பார்கள்.

முன்னுள் அமைச்சர்களில் ராகவானந்தம், எஸ் என். ராஜேந்திரன், எஸ். ஆர். ராதா, அருணுசலம், கே கலைமணி, ரி. வீராசாமி ஆகிய ஆறு பேரும் புதிய அமைச்சரவையில் இடம்பெறவில்லை.

முன்னுள் தமிழ்நாடு அமைச்சர்களில் திரு குழந்தைவேலு லோக்சபாவுக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். விஜயசாரதி தேர்தலில் தோற்றுவிட்டார். [சூ]

## தமிழக மீனவர்...

(1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி

கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் 5முறை அவர்களை நோக்கிச சுட்டதாகவும் முதுகிலும், நெஞ்சிலும் சூடுபட்ட இரு மீனவர்களும் ஸ்தலத்திலேயே மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சென்ற விசைப்படகு பலத்த சேதத்துக்குள்ளானதாகவும், இதனுல் மற்ருெரு விசைப்படகு ஒன்றின் மூலமே சடலங்கள் இராமேஸ்வரம் கொண்டுவரப்பட்டதாகவும் இராமநாதபுரம் ஆட்சித் தலைவர் திரு எஸ்.குருமூர்த்தி தெரிவித்தார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இராமேஸ்வரம் பகுதியில் பெரும் பதட்ட நிலை உருவாகியுள்ளது. கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் யாவும் நேற்று மூடப்பட்டன நிலைமையை ஆராய்வதற்காக இராமநாதபுரம் உதவி ஆட்சித் தலைவர் இராமேஸ்வரம் விரைந்துள்ளார்.

இறந்த இரு மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா 2000 ரூபா வீதம் வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

ஆத்திரமடைந்த இராமேஸ்வரம் மீனவர்கள் ராமேஸ்வரம் ரயில்நிலையத்திற்குச் சென்று, அங்கு தரித்துநின்ற ரயிலொன்றின் முதல் வகுப்புப் பெட்டியைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

## பல்கலைக்கழக...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

தணிக்கை செய்யப்பட்டுள்ளன

இவைகள் சம்பந்தப்பட்ட செய்திகள், கட்டுரைகள், கருத்துக்கள், புகைப்படங்கள் ஆகியவற்றைப் பிரசுரிக்க வேண்டுமாயின், அவைகளை பிரசுரிக்கப்படும்முன் தகுதி வாய்ந்த அதிகாரியிடம் சமர்ப்பித்து அனுமதியைப்பெற்றுக் கொள்ளவேண்டும் என இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (ரா)

## அமைச்சர்'லலித்'..

[1ம்பக்க 4ம் கலத்தொடர்ச்சி]

பும் இவ்வாறு கூறியுள்ளார்கள் ஜனவரி 1-ம் திகதிக்கு முன்பு வடக்கிலுள்ள சகல இராணுவ முகாம்களையும் அகற்றிவிடுவதாகவும் ஜனவரி 14ம் திகதி தமிழ் ஈழத்தை அமைப்பதாகவும் கூறியிருந்தார்கள். ஆனுல் அவற்றை முப்படையினர் முறியடித்து பொய்யாக்கியமை குறிப்பிடத்தக்கது' என்று அமைச்சர் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார். [ரா]

## மரண அறிவித்தல்

### முத்தையா கிருபாகரன் (கிருபா மாஸ்டர்)

முன்னுள் யாழ். மத்திய கல்லூரி ஆசிரியரும், இளைப்பாறிய மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியுமான திரு. முத்தையா கிருபாகரன் (கிருபாமாஸ்டர்) காலமானுர். இவர் அருந்ததியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற ருஜமோகன், சந்திரமோகன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னரின் நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை (16-2-85) காலை 8-00 மணிக்கு 54, 4ம் குறுக்குத் தெருவில் நடைபெற்று கொட்டடிச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். 1851

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone um 22nber3 -24126.